# மெட்ரோவில் 86,000 பேர் பயணம்

**சென்னை, பிப். 16–**

சென்னையில் இயக்கப்படும் மெட்ரோ ரயிலில், 10ம் தேதியில் இருந்து, 13ம் தேதி வரை இலவச பயணம் அனுமதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முதல், கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி, மெட்ரோ ரயிலில் நேற்று முன்தினம், 86 ஆயிரத்து, 312 பேர் பயணம் செய்தனர்.

மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

வண்ணாரப்பேட்டைக்கு நீட்டிக்கப்பட்ட பின், பயணியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இன்னும் ஒரு மாதத்தில், தினமும் ஒன்றரை லட்சம் பயணியர் வரை, மெட்ரோவில் பயணம் செய்வர் என, எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.